# அழகானதொரு வீட்டுத்தோட்டம்
# உறுதியானதொரு பொருளாதாரம்



**விவசாயத் திணைக்களம்**

# கத்தரி



**நிலப் பண்படுத்தல்**

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30 ச.மீ. x 30 ச.மீ. ஆழத்துக்கு குழிகளை தயார் செய்யவும். நாற்றை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை 3 - 4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும்.

**நடுகை இடைவெளி**

வரிசைகளுக்கிடையில் 90 ச.மீ.
வரிசையில் நாற்றுக்கிடையில் 60 ச.மீ.

**விதை/ நாற்று நடல்**

25 - 30 நாட்கள் வயதுடைய நாற்றுக்கள் 1 வீதம் இரண்டு குழிகளுக்கு, வேர் மண்ணினுள் நன்கு புதையும் வண்ணம் நட்டு நீர் வழங்கி நிழல் கொடுக்கவும்

**இரசாயனப் பசளை இடல்**

**அடிக்கட்டுப் பசளை**

யூரியா 01 பங்கு, செறிந்த சுப்பர் பொஸ்பேற்று 04 பங்கு, மியுறியேற்று பொட்டாசு 01 பங்கு கொண்ட பசளை கலவையை தயாரித்து, 02 தீப்பெட்டி மூடி அளவை குழிக்களுக்கு இட்டு கலக்கவும்.

**மேற்கட்டுப் பசளை**

நாற்றை நட்டு 4 - 8 வாரத்தினுள் யூரியா ஒரு தீப்பெட்டி மூடி அளவை குழிக்களுக்கு இடவும். மாதத்திற்கு ஒரு முறை மூன்று தடவை யூரியா 01 பங்கு, மியுறியேற்று ஒப் பொட்டாசு 01 பங்கு கலவை 01 தீப்பெட்டி மூடி அளவை கொண்ட குழிக்களுக்கு இடவும்.

**பயிர் பராமரிப்பு நடவடிக்கை**

பிரதான தண்டின் கீழேயுள்ள கிளைகளை வெட்டவும்.

**அறுவடை**

2-2 1/2 மாதங்களில் முதல் அறுவடையைப் பெறலாம்.

**போசனைப் பெறுமானம்**

உயிர்ச்சத்து "பி" மற்றும் நார்ப் பொருள்கள் அதிகம் காணப்படும்

# வெண்டி



**நிலப் பண்படுத்தல்**

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30 ச.மீ. x 30 ச.மீ. ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை 3 - 4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும்.

**நடுகை இடைவெளி**

வரிசைகளுக்கிடையில் 90 ச.மீ.
வரிசையில் நாற்றுக்கிடையில் 60 ச.மீ.

**விதை/ நாற்று நடல்**

ஒரு குழியில் 2 - 3 ச.மீ ஆழத்திற்கு விதை 3 - 4 இடவும். விதை முளைத்து 2 கிழமையில் ஒரு குழிக்கு 2 கன்று விட்டு மேலதிக கன்றுகளை அகற்றவும்.

**இரசாயனப் பசளை இடல்**

**அடிக்கட்டுப் பசளை**

விதை, நாற்று நட்டு 2-3 நாட்களுக்கு முன்னர் குழிகளுக்கு கலந்து விடவும். யூரியா 1 பகுதி, செறிந்த சுப்பர் பொசுபேட் 3 பகுதி, மியூரியேட் ஒப் பொட்டாசு 1 பகுதியை கலந்து ஒரு தீப்பெட்டி மூடி அளவை ஒரு குழிக்கு இட்டு மண்ணை கலந்து விடவும்.

**மேற்கட்டுப் பசளை**

4 - 7 ம் வாரத்தில் இடவும். யூரியா 1 பகுதி, மியூரியேட் ஒப் பொட்டாசு 1 பகுதியை கலந்து அதில் ஒரு தீப்பெட்டி மூடி அளவை ஒரு நாற்றைச் சுற்றியும் இட்டு மண்ணை கலந்து விடவும்.

**பயிர் பராமரிப்பு நடவடிக்கை**

விளைவைப் பெறும் போது அதன் கீழுள்ள இலைகளை அகற்றவும்.

**அறுவடை**

2 மாதங்களில் முதல் அறுவடையை பெறலாம்

**போசனைப் பெறுமானம்**

கல்சியம், அயடீன், விட்டமின் சீ அதிகமுள்ள மரக்கறி

# சிறகவரை



**நிலப் பண்படுத்தல்**

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30 ச.மீ. x 30 ச.மீ. ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை 3 - 4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும்.

**நடுகை இடைவெளி**

வரிசைகளுக்கிடையில் 75 ச.மீ.
வரிசையில் நாற்றுக்கிடையில் 60 ச.மீ.

**விதை/ நாற்று நடல்**

ஒரு குழிக்கு 1 - 2 விதை இடவும்.

**இரசாயனப் பசளை இடல்**

**அடிக்கட்டுப் பசளை**

விதை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் குழிக்கு இடவும். யூரியா 01 பங்கு, செறிந்த சுப்பர் பொஸ்பேற்று 03 பங்கு, மியுறியேற்று பொட்டாசு 01 பங்கு கொண்ட பசளை கலவையில் 01 தீப்பெட்டி மூடி அளவை ஒரு குழிக்கு இடவும்.

**மேட்கட்டுப் பசளை**

(விதை நட்டு 2-3 வாரத்தில் இடவும்) யூரியா 01 பங்கு, மியுறியேற்று பொட்டாசு 01 பங்கு கொண்ட பசளை கலவையில் 01 தீப்பெட்டி மூடி அளவை 03 குழிகளுக்கு இடவும்.

**பயிர் பராமரிப்பு நடவடிக்கை**

எல்லாக் கொடிகளையும் ஆதாரத்தில் படர விடவும். கொடிக்கு 2 மீற்றர் உயரமான கம்பை நட்டு அவற்றிற்கிடையில் வேலி முறையில் கயிறைக் கட்டவும். அதில் கொடியைப் படர விடவும்.

**அறுவடை**

90 நாட்களில் அறுவடையைப் பெற ஆரம்பிக்கலாம்.

**போசனைப் பெறுமானம்**

புரதம், விட்டமின் சீ மற்றும் நார் பொருள் அதிகமான மரக்கறி

# கறிமிளகாய்



**நிலப் பண்படுத்தல்**

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30 ச.மீ. x 30 ச.மீ. ஆழத்துக்கு குழிகளை தயார் செய்யவும். நாற்றை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை 3-4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும்.

**நடுகை இடைவெளி**

வரிசைகளுக்கிடையில் 40 ச.மீ.
வரிசையில் நாற்றுக்கிடையில் 40 ச.மீ.

**விதை/ நாற்று நடல்**

25-30 நாட்கள் வயதுடைய நாற்றுக்கள் 2 வீதம் ஒரு குழிக்கு, இட்டு வேர் மண்ணினுள் நன்கு புதையும் வண்ணம் நட்டு நீர் வழங்கி நிழல் கொடுக்கவும்

**இரசாயனப் பசளை இடல்**

**அடிக்கட்டுப் பசளை**

விதை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்பு மண்ணுடன் கலந்து இடவும். யூரியா 02 பங்கு, செறிந்த சுப்பர் பொஸ்பேற்று 03 பங்கு, மியுறியேற்று பொட்டாசு 01 பங்கு கொண்ட கலவையை தயாரித்து இக்கலவையில் இருந்து 01 தீப்பெட்டி மூடி அளவை ஒவ்வொரு குழிக்கும் இடவும்.

**மேற்கட்டுப் பசளை**

யூறியா 02 பங்கு, மியூறியேற்றுப் ஒப் பொட்டாசின் 01 பங்குடன் கலக்கவும். நட்டு 4ம் வாரத்தில் இக்கலவையில் இருந்து 01 தீப்பெட்டி மூடி அளவை ஒவ்வொரு குழிக்கும் இடவும்.

**பயிர் பராமரிப்பு நடவடிக்கை**

கன்று வளர்வதோடு மண்ணை இணைக்கவும்

**அறுவடை**

நட்டு 75 நாட்ளில் முதல் அறுவடையை பெறலாம்.

**போசணைப் பெறுமானம்**

விட்டமின் A மற்றும் C அடங்கிய மரக்கறி.

# பசளி



**நிலப் பண்படுத்தல்**

களைகளை அகற்றி மண்ணை நன்றாக புரட்டி மென்மையாக தூர்வையாக்கி 30 ச.மீ. x 30 ச.மீ. ஆழத்திற்கு குழிகளை தயார் செய்யவும். விதை நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்னர் நன்கு உக்கிய சேதனப் பசளை 3 - 4 கைப்பிடிகள் சேர்த்து மண்ணுடன் கலந்து குழிகளுக்கு இடவும்.

**நடுகை இடைவெளி**

வரிசைகளுக்கிடையில் 45 ச.மீ.
வரிசையில் நாற்றுக்கிடையில் 45 ச.மீ.

**விதை/ நாற்று நடல்**

ஒவ்வொரு நடுகைக் குழிக்கும் 2 விதையை நடவும்.

**இரசாயனப் பசளை இடல்**

**அடிக்கட்டுப் பசளை**

விதை நடுவதற்கு 2 - 3 நாட்களுக்கு முன்பு குழிகளுக்கு கலந்து இடவும். யூரியா 01 பங்கு, செறிந்த சுப்பர் பொஸ்பேற்று 03 பங்கு, மியுறியேற்று ஒப் பொட்டாசு 01 பங்கு கொண்ட பசளையை கலந்து கொண்டு 3 குழிகளுக்க 01 தீப்பெட்டி மூடி அளவை குழிக்கும் இடவும்.

**மேற்கட்டுப் பசளை**

நட்டு 3-5 வாரத்தில் இடவும். யூரியா 01 பங்கு, மியூறியேற்று ஒப் பொட்டாசின் 01 பங்குடன் கலந்து அக்கலவையில் இருந்து 3 குழிகளுக்கு 1 தீப்பெட்டி மூடி அளவை இடவும்.

**பயிர் பராமரிப்பு நடவடிக்கை**

நட்டு 4 கிழமையின் பின் நிலமட்டத்திலிருந்து 1 - 1 1/2 அடி உயரத்தில் பாத்திக்கு மேலால் பந்தலை அமைக்கவும்.

**அறுவடை**

45 நாட்களுக்கு பின் பல தடவைகள் விளைச்சலை பெறலாம்

**போசனைப் பெறுமானம்**

விட்டமின் “ஏ” இரும்பு, நார்ப் பொருள்கள் கொண்ட மரக்கறி.

## வீட்டுத் தோட்ட செய்கையில் முக்கியத்துவம் வாய்ந்த பொதுவான விடயங்கள்

- விதைகளை இயன்றளவு விரைவாக வயலில் நடவும். கடும் மழை காலத்தில் விதைகளை நடுவதை தவிர்க்கவும். பொருத்தமான காலம் வரும் வரை அல்லது நீண்டகாலம் வைத்திருப்பதற்கு அவசியமாயின் விதைகளை உலர்ந்த, குளிரான இடம் ஒன்றில் வைக்கவும்.
- எப்பொழுதும் போதியளவு நன்கு உக்கிய சேதனப் பசளையினை பயிரை நடுவதற்கு முன் நிலப்பண்படுத்தலின் போது மண்ணுடன் சேர்த்து கலந்து விடவும்.
- இரசயானப் பசளை இடும் போது நாற்றின் அடிப்பகுதிக்கு இடுவதை தவிர்க்கவும்.
- மண்ணின் ஈரலிப்பினை உரிய முறையில் பேணுவதற்கு தேவையான சகல சந்தர்ப்பங்களிலும் நீர் பாய்ச்சவும்.
- பயிர்ச்செய்கையினை களைத் தாவரங்கள் அற்றதாக பேணவும்.
- மண்ணின் ஈரலிப்பினை பாதுகாத்துக் கொள்வதற்கும் களைத் தாவரங்களை கட்டுப்படுத்துவதற்காகவும் உலர்ந்த வைக்கோல் மற்றும் புல் போன்றவற்றை மூடுபடையாக இட்டு பயிர் நிலத்தை மூடி விடவும்.
- பீடைகளின் தாக்கத்தினை குறைத்துக் கொள்வதற்காக பயிர்ச்செய்கையினை சுத்தமாக வைத்திருக்கவும். அடிக்கடி பயிர்ச்செய்கையினை பரீட்சித்து பீடைகள் அல்லது பீடைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் காணப்படின் அவற்றை சேகரித்து அழித்து விடவும்.









## அழகானதொரு வீட்டுத்தோட்டம் - உறுதியானதொரு பொருளாதாரம்

சிக்கனம் உங்களுக்குள்ளேயே உருவாக வேண்டும். அது ஒரு விதமான பழக்கமாகும். நல்ல பழக்க வழக்கங்களை எங்கள் வாழ்வில் இணைத்துக் கொள்வதற்கு இன்னும் நாம் தாமதிக்கக்கூடாது. எனவே சிக்கனம் எனும் **'நல்ல பழக்கத்தினை'** உங்கள் வாழ்விற்கு இன்றே இணைத்துக் கொள்ளுங்கள். வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை ஊடாக உங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருந்து உச்ச பயன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கிறது. தேசிய சேமிப்பு வங்கியின் இம்முயற்சியானது வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையின் மூலம் சிக்கனத்திற்கு வழிவகுத்து உங்களுக்கும் நாட்டுக்கும் உறுதியானதொரு பொருளாதார அமைப்பொன்றைக் கட்டி எழுப்புவதாகும்.

## வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை மூலம் உங்களுக்கு கிடைக்கும் பயன்கள்

- **பொருளாதார ரீதியான பயன்கள்**

  வீட்டுத்தோட்டம் செய்வதினால் உங்களது நாளாந்த தேவைகளுக்காக காய்கறிகள் மற்றும் பழ வர்க்கத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இது உங்கள் பணத்தையும் காலத்தையும் மீதப்படுத்தும்.

- **சுகாதார நன்மைகள்**

  இரசாயன மருந்து ஊட்டப்படாத காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் நிறைந்த வீட்டுத்தோட்டம் ஒன்றை நிர்மாணித்துக் கொள்ளக்கூடிய அதே வேளை புதிய வகை காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்களை உட்கொள்ளுதல் ஆரோக்கியமிக்க வாழ்வொன்றுக்கு வழிவகுக்கும்.

- **சூழல் ரீதியான பயன்கள்**

  வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையானது சூழலை பாதுகாத்துக்கொள்ள உதவுவதுடன் உங்கள் வீட்டுத்தோட்டத்தில் கொம்போஸ்ட் பெரல் (Barrel) ஒன்றை வைத்துக் கொள்வதன் மூலம் உங்களுக்கு தேவையான குப்பைகூழ முகாமைத்துவத்திற்கும் பங்களிப்பு செய்ய முடியும்.

- **ஆத்ம திருப்தி**

  உங்கள் வீட்டுத்தோட்டத்தில் வளரும் செடிகள், பூக்கும் மலர் மற்றும் விளையும் கனிகள் ஆகியவற்றை காண்பதன் மூலம் உங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஒன்றை தருவதுடன் அது மன அழுத்தத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் வழிவகுக்கின்றது. அதனோடு தொற்று நோய்களையும் தவிர்த்துகொள்ள முடியும்.

- **அழகான சுற்றுச் சூழல்**

  அழகானதொரு வீட்டுத்தோட்டமானது வீட்டுச் சுற்றுச் சூழலை மேலும் அழகுபடுத்தும்.

- **குடும்ப பொழுதுபோக்கு**

  குடும்ப பொழுதுபோக்குக்காக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகளை பயன்படுத்திக்கொள்ளக் கூடிய அதே வேளை அதனூடாக குடும்ப ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.